### 3. விரும்பிய சொல்லுடன் கதை எழுதுதல்

3 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

மேற்கோள் காட்டப்பட்டது:
Zopfi & Zopfi 1995, & 47
("Zettels Traum")

அ) வகுப்பு வட்டமாக அமைகிறது. மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒரு கதை எழுதப்படப்போவதாக ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவிக்கிறார். ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒரு சொல்லினை மனத்திலே நினைந்து தான் தேர்ந்தெடுத்த சொல்லை ஒரு தாளிலே எழுதவேண்டும்.

ஆ) குழுவின் நடுவே எல்லோரும் பார்க்கக்கூடியதாக தாள்களை பரப்பிவைத்தல்.

இ) யார் கதையைத் தொடக்க ஒரு சொல்லைப் பொறுக்குவார்? யார் இன்னொரு சொல்லுடன் அல்லது தாளுடன் தொடரவுள்ளார்? கதை சொல்லுதற்குப் பக்கநிலையில், தாள் துண்டுகள் சரியான ஒழுங்கில் வைக்கப்படும் அல்லது தொங்கவிடப்படும்.

ஈ) முடிவாக, குழு முதற்சுற்றில் ஒழுங்குபடுத்திய வரிசையில் அல்லது தமக்கு உரித்தான கருத்துகளில் மாணவர்கள் கதையை எழுதுவர். இன்றியமையாதது என்னவெனில், எல்லா தாள் துண்டுகளும் கருத்திற்கொள்ளப்பட்டுக் கதையிற் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

---

### 4. யார், எங்கே, என்ன வினாக்கதைகள்

3 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
சிறிய சிவப்பு, நீல, மஞ்சள் தாள் துண்டுகள் (A6 அல்லது A7)

அ) மாணவ இணையர்கள் (கலப்பு வயது விரும்பத்தக்கது) மூன்று வேறுபட்ட நிறத்தில் மூன்று சிறிய தாள்களைப் பெறுவர். ஒவ்வொரு அணியும் சிவப்புத் தாளில் ஓர் ஆளின் பெயரை அல்லது ஒரு விலங்கின் பெயரை, நீலத் தாளில் செயற்பாட்டின் இடத்தை, மஞ்சள் தாளில் என்ன நடக்கும் (இரண்டு அல்லது மூன்று சிறப்புச் சொற்களில்) எழுதும்.

ஆ) பின்னர் தாள்கள் சேர்க்கப்பட்டு மாறி மாறிக் கலக்கப்படும்.

இ) ஒவ்வொரு அணியும் வெவ்வேறு நிறங்களிலமைந்த மூன்று தாள் துண்டுகளைப் பெற்று அவற்றிலுள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு கதையினை ஆக்கவேண்டும்.

ஈ) நிறைவு எடுத்துரைப்பு.

---

# 4 சட்டகக் கதைகள், உணர்வுச்சொற் கதைகள், சார்புக்கட்டுக் கதைகள்

**இலக்கு**

மாணவர்களின் ஆக்கத்திறனைக் கூடுதலாக்கவும் விளையாட்டாகவும் எளிதான முறையிலும் தங்கள் முதல் மொழியில் எழுதும் மற்றும் கதை சொல்லும் மகிழ்வினை ஊக்குவிப்பதற்கும். எழுத்துருக்களை ஒப்பிடவும் மதிப்பிடவும் எளிமையான வழிகளை உருவாக்குதல்.

### சட்டகக்கதைகள், உணர்வுச்சொற்கதைகள், சார்புக்கட்டுக்கதைகள்

3 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
முடியுமாயின் ஓர் அகரமுதலி அல்லது இன்னொரு நூல் அல்லது வெளியீட்டிலிருந்து சொற்கள் "பொறுக்கு" தற்கு

**செயல்முறை (அடிப்படை சார்புக்கட்டு)**

அ) முதற் படியில், ஐந்து சொற்கள் (பார்க்கவும்: கீழே) தேர்ந்தெடுக்கப்பட்டு பலகையில் அல்லது தாளில் எழுதப்படும்.

ஆ) இவ்வைந்து சொற்களும் கதை புனைதல் குறித்துக்காட்டுவன, இதைச் சுற்றி ஒவ்வொரு மாணவரும் கதை எழுதுவர் இவ்வைந்து சொற்களும் ஒவ்வொரு கதையிலும் பயன்படுத்தப்பட வேண்டும் (முடியுமாயின், சிறப்பித்துக்காட்டலாம்.).

இ) நிறைவாக, எழுத்துருக்கள் உரத்துப் படிக்கப்பட்டு உரையாடப்படும் மற்றும்/அல்லது சுவரில் தொங்கவிடப்படும். ஒரே "எலும்புக்கூட்டிலிருந்து" எத்தனை வேறுபட்ட "கதை உடல்கள்" வெளிப்பட்டன என்பதைக் காண மெய்சிலிர்க்கும். மாணவர்கள் எவ்வாறு ஐந்து எலும்புக்கூட்டுச் சொற்களை உள்ளடக்கி தங்கள் எழுத்துருக்குள் உள்ளடக்கி செயற்பாட்டினை வசப்படுத்தினர் என்பதைச் சொல்லாடி மதிப்பிடுவது சுவையானதாகும்.

**குறிப்புகள்:**

ஐந்து சொற்களைத் தேர்ந்தெடுக்கும் செயற்பாடு:

- ஆசிரியர் வகுப்பில் ஓர் அகரமுதலியை, ஒரு நூலை அல்லது ஓர் இதழை கொண்டுசெல்வார். ஐந்து மாணவர்கள் வரிசைப்படி எழுந்தமானமாக நூலைத் திறந்து ஒரு சொல்லினை எழுதுகருவியால் சுட்டிக்காட்டுவர்.
- எல்லா மாணவர்களும் சில சொற்களைத் தாள் துண்டுகளிலே குறித்துவைப்பர். இவை பின்னர் சேர்க்கப்பட்டு கலக்கப்படும் மாணவர்கள் வெவ்வேறாக ஐந்து தாள் துண்டுகளைப் பொறுக்குவர். அச் சொற்களை அடிப்படையாக வைத்து கதை உருவாக்கவேண்டும்.

---

**மாற்றுகள்:**

1. வகுப்பு முழுவதையும் பயன்படுத்துவதைவிட, மாணவர்கள் செயல்முறையை நன்கு அறிமுகமானவர்களாயிருப்பின் ஒன்று அல்லது இரண்டு நிலைக் குழுக்கள் மட்டும் பொருத்தமானவையாகும்.

2. ஐந்து சொற்களுக்கு மாறாக மூன்று அல்லது நான்கு சொற்களைத் தெரிந்தெடுக்க முடியும். ஐந்து சொற்களுக்குமேல் பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படவில்லை.

3. தனிச் சொற்களை விட தொடர்கள் அல்லது சிறு வாக்கியங்கள் எலும்புக்கூடாக அல்லது சார்புக்கட்டாகப் பயன்படுத்தலாம்.

4. கிறிஸ்ரா மற்றும் எமில் Zopfi (1995, பக்49) இச்செயற்பாட்டிற்கான இன்னொரு நல்ல வேறுபாட்டினை பரிந்துரைத்துள்ளனர்: மூன்று தொடக்கம் ஐந்து பொருள்கள் அல்லது சொற்கள் இடம்பெறும் ஒரு கதையினை ஒவ்வொரு மாணவன்/மாணவியிடமிருந்து வேண்டிக்கொள்ளலாம். அவள்/அவன் ஒரு தாள் துண்டில் இச் சொற்களை எழுதி இன்னொரு மாணவருக்குக் கடத்துவர். இரண்டாவது மாணவர் வேண்டப்பட்ட குறிப்பிட்ட சொற்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு கதையை எழுதி முதல் மாணவருக்குப் பரிசாக திருப்பி வழங்குவார். (மாற்றுகள்: "விருப்புப் பட்டியல்கள்" ஒரு கூடைக்குள் வைக்கப்படும். ஒவ்வொரு பிள்ளையும் ஒரு பட்டியலை எடுத்து அதன் அடிப்படையில் ஒரு கதை எழுதுவர்.) விரிவாக்கம்: பெற்றோர்களை அல்லது குடும்ப உறுப்பினர்களை அத்தகைய பட்டியலைத் தரும்படி வேண்டலாம், பின்னர் கதையைப் பரிசாக அவர்கள் பெறுவர். (இதையும் பார்க்கவும் 3, "விருப்புச்சொற் கதைகள்").

I